சேலம் ஜில்லா கிச்சிப்பாளயத்தில் மாமியாரையும்,
சகலபாடியையும் கத்தியால்குத்தி மாளவைத்ததினுல்

நாராயணன் தூக்கில் மாண்ட

பரிதாபச் சிந்து

முழு விபரம்
அடங்கியது.

ஸ்ரீ [illegible]

V. R. கோவிந்தராஜுலு அவர்கள் எழுதியது
V. R. பெருமாள் நாயுடு
சேலம் ஸிடி பிரஸில் அச்சடிக்கப்பட்டது.

விலை] 1940. [காலணா.

574
2788
MADRAS 8 NOV 1940 OFFICE OF THE ...

(தெம்மாங்கு.)

1. வேலுக்கு மூத்தவனே விக்கின விநாயகனே
விபரமுடன் கொலை விபரம்பாட வரந்தாசுதனே
ஆனைமுகத்தோனே உன்னை அடிபணிந்தேன் நானே

2. பூவுலகில் எவ்வளவோ கொலைகளையும் கேட்டிருப்பீர்
புண்யரே இச்சிபாளையம் நாராயணன் கொலையைப்போல
கேட்டிருக்கமாட்டீர் நன்றாய் விபரமுடன் கேட்பீர்

3. தாயும்மகளும்மாக தனியாகவே வாழ்ந்துவந்தார்
வாழ்ந்துவரும் நாளையிலே வம்புகள் ஓர்விதமாக
கூடுதுபார் ஐயா இந்த குவலயத்தில் மெய்யா

4. இருவரும் இன்பமுடன் வாழ்ந்துவரும் நாளையிலே
நேசனாக நாராயணன் இவர்களுடைய வீட்டுக்குத்தான்.
போவதய்யா வழக்கம் இந்த குவலயத்தில் பழக்கம்

5. கார்த்திகை மாதத்திலே சனிக்கிழமை நாளையிலே
கலியாண முடிந்ததென்று காசினியோர் தானறிய
இருவருமாய் வாழ்ந்தார் வெகு இன்பமுடன் இருந்தார்

6. கலியாணம் செய்தவுடன் மூவர்ராக உலகினிலே
கவலையுமில்லாமலே கண்யமுடன் வாழ்ந்துவந்தார்
பிரம்மன் எழுத்துமாரி கெட்டகாலம் வந்ததுசிரி

7. சீர்மிகுந்த சிங்கப்பூரில் சிறப்புடனே வாழ்ந்துவந்த
சேயனும் சுப்பையாவும் சேலத்திற்கு செல்வோமென்று
புறப்பட்டாராம் ஐயா பூனை குறுக்கவந்தது மெய்யா

8. கப்பலைவிட்டிரங்கி கபடம் இல்ல ரையில் தனக்கு
சுத்தமுடன் டிக்கட்டை வாங்கி சுருசுருப்பாய் எஸ்-ஐ-ஆர்ரில்
ஏரிவிட்டார் அன்று சேலம் போகவேணுமென்று

9. கோபமுடன் நாராயணன் குவலயத்தில் சுற்றிவர
கண்ணிலே காணுததால் கவலைகொண்டார் மனதினிலே
கொல்லுவ்து எப்போ நாம் கூடுவது எப்போ

10. சென்னை கோவிந்தராஜன் சிந்தாக எழுதியதை
சிறப்புடன் யாவர்களும் படித்து பிழை பொருக்கவேனும்
நாராயணன் சிந்து இதை நகரமுழுதும் முந்து

11. ஆங்கார கோபமதை கொண்டு டேய்
சுப்பையா அங்கேயே நில்லென்று சொல்லி
கத்தியை கைதனில் எடுத்தார் அவர்

12. கண்ட துண்டமாக அங்கேயே போட்டார்
போட்டதை ஊரினில் பார்த்தார் அவரை
பார்த்தவுடன் ஜனங்கள் கூச்சலுமிட்டார்

13. கைகத்திவிடாமல் ஐயா அவர்
கண்ணி வீரம்மாளே கொல்லவேணும்மெய்யா
கொல்லைபுறமாக சென்றார் அங்கே

14. சென்றவுடன் ஒருவரையும் காணுமல் நின்றார்
நின்றதும் வீட்டுக்குள் நுழைந்தார் அவர்
நுழைந்ததைதையலம்மா கண்ணாலே கண்டாள்

15. கண்டதும் வீட்டுக்குள் வந்தாள் அவள்
வந்ததை நாராயணன் கண்ணாலே பார்த்தார்
பார்த்ததும் வெட்டொன்றுபோட அப்போ
போட்டதும் மாமியார் பூமியில் மாள
தந்தினம்—தின—தந்தின.

சென்னை கோவிந்தராஜன் பாட்டு இந்த
சேலம் ஷண்முகம் முடன் பாடிவரும்மெட்டு
பாங்கான டேப்பு தாளம் போட்டு இருவர்
பாடிவருகின்றோம் காலை நீட்டு

வானுலக வீதியெல்லாம் என்ற மெட்டு.

குத்தினவுடன் போலீஸுக்கு சென்றார் பாரே
சென்றவுடன் எல்லோரையும் நமஸ்க்கரித்தாரே
வெள்ளிக்கிழமை ஆறுக்கெல்லாம் வாக்குமூலத்தை
விபரமுடன் கேட்டுவிட்டார் போலீஸ் மன்னர்கள்
கேட்டவுடன் நாரயணனை சிறையுமே செய்தார்
செய்தவுடன் சாட்சிகளை கண்டுமே எடுத்தார்
சேலம் டவுன் கோர்ட்டினிலே கேசுமே எடுத்தார்
எடுத்தவுடன் சாட்சிகளை சரியாககேட்டார்
கேட்டவுடன் சாட்சி ருசுவு சரிதானே என்றார்
சொன்னவுடன் நாராயணன் திகைத்துமே நின்றார்
நின்றவுடன் இந்த விபரம் சரியில்லை யென்றார்

சொன்னவுடன் மேல் கோர்ட்டுக்கு அனுப்புங்கள் என்றார்
கட்டை எடுத்து பார்த்தவுடன் ஜர்ஜ்ஜி துரையவர்
கண்டிஷனுய் வாக்குமூலத்தை வாங்கியே விட்டார்
வாங்கினவுடன் தரும துரை யோசனை செய்தார்
செய்தவுடன் ஜர்ஜ்ஜி துரை தூக்கு என்றார்
ஜெகமுழுதும் டேப் அடித்து பாடிடும் பேரு
சிறுவர் கோவிந்தராஜன் ஷன்முகம் பாடுவதை கேளு
கேட்டவுடன் பிழையிருந்தால் பொருத்து நீ நாடு
பொருப்பதைவிட கார்த்து என்னை ரக்ஷிக்கதேடு

ஐயா சிறுபெண் என்ற மெட்டு.

மாமியாரை கொண்றதினுல் நாராயணன் பேச்சு
இந்த மானிலத்தில் தூக்கிலிட காலமும் மாச்சு
ஜனங்கள் பதரிடலாச்சு (மா)

1. தூக்கு என்று சொன்னவுடன் ஆனந்தம் கொண்டார்
கொண்டதினுல் ஜர்ஜ்ஜியிடம் சரிதானே என்றார்
சொன்னவுடன் முருகன்மீது பஜனையும் செய்தார்
அவர் செய்தவுடன் ஜனங்களையே வணங்கிதான் நின்றார்
பந்து விசனமும் கொண்டார் (மா)

2. சென்னை செஷன் கோர்ட்டாருக்கு மனுவுகள் போச்சு
போனவுடன் தரும துரை பிரித்திடலாச்சு
பிரித்தவுடன் சங்கதியை அறிந்திடலாச்சு
அவர் அறிந்தவுடன் தூக்கு என்று சொல்லிடலாச்சு
சேலம் வந்திடலாச்சு (மா)

3. வைஸ்ராய்க்கும் கவர்னருக்கும் மனுவுகள் போச்சு
மனுவை பிரித்து பார்த்து கவர்னர் தள்ளிடலாச்சு
தள்ளியதை வைஸ்ராயும் பார்த்திடலாச்சு
அவர் பார்த்து தூக்கு என்றுசொல்ல ஆர்டருமாச்சு
ஜனங்கள் திகைத்திடலாச்சு. (மா)

4. சேலம் செஷன் கோர்ட்டார் தந்த தூக்கத்தின் பேச்சு
ஜெகமதிலே சென்றவிடம் ஊர்ஜிதம் மாச்சு
இனி பிழைக்க நாரயணன் ஏங்கிடலாச்சு
அவர் ஏங்கினவுடன் கடவுளையே துதித்திடலாச்சு
வெகு கண்யமும் மாச்சு (மா)

5. பிப்பரவரிமாதம் பதினாறும் தேதியே
பிரியமுள்ள வியாழக்கிழமை காலை ஐந்துக்கே
சூப்பிரெண்டு ஆபீசர்கள் ஒன்று கூடியே
இவரை சோக்கமுடன் தூக்கினிலே மாட்டினார் தனியே
ஜனங்கள் தவித்தனர் கனியே (மா)

6. வியாழக்கிழமை எட்டுக்கெல்லாம் பிரேதத்தை கொடுத்தார்
கொடுத்தவுடன் ஜனங்களெல்லாம் தவித்துமே நின்ருர்
நின்றவுடன் பந்துக்கள் விசனமும் கொண்டார்
கொண்டவுடன் வண்டியிலே யேற்றியே சென்ருர்
கிச்சிபாளையம் புகுந்தார் (மா)

7. நாராயணன் பிரேதம் பார்க்க ஏருஎ. ச..டடம்
கிச்சிப்பாளையம் பிடிக்காமலே போனது கூட்டம்
போன ஜனங்கள் மனமது எல்லாம் பார்த்தாலே வாட்டம்
அவரை பார்த்தவுட பக்குவமாய் சேர்ந்ாரே பட்ணம்
எமலோகத்தின் பட்ணம் (மா)

8. உலகமெல்லாம் நல்லவரென்று பெயர் எடு..தாரே
உன்மை ஊழியன் என்று அவர் இருந்து வந்தாரே
காலமும் முடிந்ததிஞல் கொலையும் செய்தாரே
அவர் செய்ததிஞல் தூக்கில் இட்டே மாண்டனர் பாரே
பந்துக்கள் தவிக்கின்ருர்களே (மா)

9. சென்னல் விளையும் சேயன் வேணுகோபால் சீடனே
மைந்தன் கோவிந்தராஜன் கீதம் பாடினேன் நானே
மனபான்மையுடன் பிழைகள் இருந்தாலே பொருக்கவேணுமே
இதை பார்வை செய்தது பூமிதன்னில் ஷன்முகம் கோனே
விலை காலணு தானே. (மா)